

நலிந்தோர்க்கு உதவிடும் நல்வாழ்வுத் திட்டங்கள்!

பயன் பெறும் வழிமுறைகள்

170 ௫க
தமிழ்க் 'கா. சு.' நூலகம்,
ஈசுவரவடிவு அகம் - குளித்தலை.

நலிந்தோர்க்கு உதவிடும் நல்வாழ்வுத் திட்டங்கள்

பதிப்புரை

சமுதாயத்தில், நலிவுற்ற மக்களுக்கு உதவும் வகையில் பற்பல நல்வாழ்வுத் திட்டங்களை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆணைப்படித் தமிழ்நாடு அரசு செயற்படுத்தி வருகிறது.

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம்.

★ டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டம்.

★ முதியோர் உதவித் திட்டம்.

★ குடும்பத் தலைவரை இழக்க நேரிடும் ஏழைக் குடும்பங்களுக்கு நிதி உதவித் திட்டம்.

3247

★ விபத்தில் இறந்தவரின் குடும்பத்திற்கு நிதி உதவித் திட்டம்.

★ அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித்திட்டம்.

★ நிலமற்ற ஏழைமக்களுக்கு நிலப்பட்டா வழங்கும் திட்டம்.

★ வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டம்.

★ ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்.

354.5411'361

★ சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, இருதய அறுவைச் சிகிச்சைக்கு நிதி உதவி வழங்கும் திட்டம்.

★ ஏழை, எளியவர்களுக்கு இலவசத் தொழிற்கருவிகள் வழங்கும் திட்டம்.

★ மகளிர்க்கு தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம்.

ஆகிய திட்டங்களின்மூலம், சமுதாயத்தில், நலிந்த பிரிவினருக்கு உதவி செய்வதில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் காட்டி வருகிறார் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்.

இந்த உதவிகளை எப்படிப் பெற வேண்டும், யாரை அணுக வேண்டும் என்ற விவரங்கள், திட்டங்களால் பயன்பெறத் தகுதியுடையோருக்குச் சரிவரச் சென்று சேர்வதில்லை. அவர்களுக்கு வழிகாட்டும் வகையில் இந்தக் 'கையேடு' வெளியிடப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் சமூகநலப் பணியாளர்கள், தொண்டு நிறுவன ஊழியர்கள் ஆகியோர், பொது மக்களுக்கு இந்த விவரங்களை எடுத்துச் சொல்வதற்கும் வழிகாட்டுவதற்கும் இந்தக் 'கையேடு' பெரிதும் உதவும் என்று நம்புகிறோம். அவர்கள், பயன்படுத்திட வேண்டும் என விரும்புகிறோம்.

இயக்குநர்,

15.12.90

செய்தி மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழ்க் 'கா. சு' நூலகம்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம்

பெண்கள் சமுதாயத்தின் கண்கள் போன்றவர்கள். அதனால் பெண்களின் மறுமலர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு முதலிடமும், முன்னுரிமையும் அளித்துள்ளது. சமுதாயத்தில் பெண்களின் தகுதியை உயர்த்தவும், படிக்கின்ற ஆர்வத்தை ஊக்குவிக்கவும் கொண்டுவரப்பட்ட திட்டம்தான் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூ.5,000 நிதியுதவி அளிக்கும் திட்டம். மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம் என இத்திட்டம் அழைக்கப்படுகிறது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் 66-வது பிறந்த நாளான 3.6.1989-ஆம் நாள் முதல், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நிதி உதவி பெறத் தகுதி உள்ளவர்கள்

நமது மாநிலத்தில் உள்ள ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண்கள், 8-ஆம் வகுப்பு அல்லது அதற்கு மேல் படித்திருக்க வேண்டும். பழங்குடியினருக்குக் கல்வித் தகுதி 5-ஆம் வகுப்பு எனத் தளர்த்தப்பட்டுள்ளது. திருமணத்தின் போது 18 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும்.

ஏழைக் குடும்பம் எது?

ஒரு குடும்பம் ஏழைக்குடும்பம் என்பதை எப்படித் தீர்மானிப்பது? அதற்கு, பின்வரும் அளவுகோல்கள் பின்பற்றப்படுகின்றன:

(1) நிலமற்ற விவசாயக் கூலிக்குடும்பங்களைச் சேர்ந்தவர் களாக இருக்கலாம். அந்தக் குடும்பத்தில் அனைவரும் விவசாயக் கூலியாக வேலை செய்து பிழைப்பவர்களாக இருக்கலாம்.

(2) சிறு மற்றும் குறு விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர் களாகவும் இருக்கலாம். அந்தக் குடும்பத்திற்குச் சொந்த நிலம் கூட இருக்கலாம். ஆனால் அந்த நிலம் நன்செய்யாக இருந்தால் 2.5 ஏக்கருக்கு அதிகமாகவும், புன்செய்யாக இருந்தால் 5 ஏக்கருக்கு அதிகமாகவும் இருக்கக்கூடாது. அல்லது இந்த இருவகை நிலமும் சேர்ந்து மொத்தம் 5 ஏக்கருக்கு மேல் போகக் கூடாது. ஒரு ஏக்கர் நன்செய் நிலம், இரண்டு ஏக்கர் புன்செய் நிலத்திற்குச் சமமாகக் கணக்கிடப்படும்.

(3) ஒரு குடும்பம் குத்தகை நிலத்தில் விவசாயம் செய்தால், ஒரு ஏக்கர் நன்செய் குத்தகை நிலம், அரை ஏக்கர் நன்செய் சொந்த நிலத்திற்குச் சமமாகவும், ஒரு ஏக்கர் புன்செய் குத்தகை நிலம், அரை ஏக்கர் புன்செய் சொந்த நிலத்திற்குச் சமமாகவும் கருதப்பட்டு அதன் அடிப்படையில் சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலத்தின் அளவு கணக்கிடப்படும்.

(4) விவசாயம் சாராத வேலைகள் மூலம் வருமானம் பெற்று வாழும் குடும்பங்கள் விஷயத்தில், அந்தக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.5,000 அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

(5) நிலவுடைமையைக் கணக்கிடும்பொழுது, உணவு தானியம் பயிரிடப்படும் நிலம்தான் எடுத்துக்கொள்ளப்படும். கரும்பு, வாழை, புகையிலை, மஞ்சள், மிளகாய், பாசனம் பெறும் பருத்தி, பாசனம் பெறும் நிலக்கடலை ஆகியவை பயிரிடப்பட்டால், மொத்த வருமானம் கணக்கில் கொள்ளப்படும். அது, ஆண்டுக்கு 5,000 ரூபாய்க்கு அதிகமாகக் கூடாது.

விண்ணப்பம் செய்யும் முறை

ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி அலுவலகம் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலகம் ஆகிய இடங்களில் இதற்குரிய விண்ணப்பம் இலவசமாகக் கிடைக்கும். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதற்கு வருவாய்த் துறைச் சான்றிதழ், கல்வி, வயது ஆகியவற்றிற்குரிய சான்றிதழ் ஆகியவற்றைப் பெற்று, திருமணப் பத்திரிகையோடு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பத்துடன் இணைத்து, ஊராட்சி ஒன்றியம், நகரியம், நகராட்சி மற்றும்

மாநகராட்சி ஆகிய அலுவலகங்களில் விண்ணப்பங்களைக் கொடுத்தல் வேண்டும். சமூக நலத் துறையைச் சார்ந்த விரிவாக்க அலுவலர் (எக்ஸ்டென்சன் ஆபீசர்) விண்ணபப்பத்திலுள்ள விவரங்கள் சரியானவைதானா என்பதையும், திருமணம் நிச்சயமாகியுள்ளதா என்பதையும் கிராமத்திலுள்ள, குறைந்தது இரண்டு சாட்சி களிடமாவது விசாரித்து அறிந்து, விண்ணபப்த்தை ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு (பி.டி.ஓ) அனுப்புவார். ஊராட்சி ஒன்றிய ஆணையர் திருமண உதவி அனுமதி வழங்குவார். மாநகராட்சிக் குட்பட்ட இடங்களில் மாநகராட்சி ஆணையரும், நகராட்சிக்குட் பட்ட இடங்களில் நகராட்சி ஆணையரும், நகரியப் பகுதிகளில், தொடர்புடைய செயல் அலுவலரும் திருமண உதவி வழங்குவர்.

திருமணத்திற்காக உதவித் தொகை ரூ.5,000 முழுவதுமாகக் கேட்புக் காசோலை (டிமாண்ட் டிராப்ட்) வடிவில் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முழுப் பொறுப்பு, சமூக நலத்துறை இயக்குநரைச் சார்ந்தது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகரங்களில் மாநகராட்சி ஆணையரும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள்.

★ இத்திட்டத்தின் மூலம் 1989 (ஏப்ரல் முதல்) 1990 நவம்பர் 30-ஆம் நாள் வரை, பயனடைந்த ஏழைப் பெண்கள் எண்ணிக்கை 32,263. வழங்கப்பட்ட தொகை ரூ.16.13 கோடி.

ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம்

''மகளிர் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தருகிற மற்றுமொரு ஏற்பாடாக, வறுமையில் உழலும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், எட்டாம் வகுப்பு அல்லது அதற்கு மேல் படித்துத் தேறியிருந்தால், அவர்களின் திருமணச் செலவுக்காக ரூ.5,000 உதவித் தொகை வழங்கப்படும்.

—மாண்புமிகு முதல்வர் கலைஞர்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்

கருவுற்ற தாய்மார்களுக்கு அரசின் நிதியுதவி ரூ.200 வழங்கப் படுகிறது. இத்திட்டம் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப் பேறு உதவித்திட்டம் என அழைக்கப்படுகிறது. 3.6.1989 முதல், இத்திட்டம் செயலாக்கப்படுகிறது.

திட்டத்தின் நோக்கம்

கருவுற்ற பெண்களுக்கு ஊட்டச்சத்து மிகவும் அவசியம். ஆனால், வறுமையின் காரணமாக, கருவுற்ற பெண்கள் போது மான அளவு ஊட்ட உணவு பெற முடிவதில்லை, உழைக்கவும் இயலவில்லை. இந்தக் குறையினை நீக்கி, அவர்களுக்கு உதவி செய்யும் கருணை உள்ளத்துடன் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது.

குழந்தை பிறப்பதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பிருந்தும், குழந்தை பிறந்த பின் இரண்டு மாதம் வரையிலும் ஆக மொத்தம் நான்கு மாதங்களுக்கு, மாதம் ஒன்றிற்கு ரூ.50 வீதம் மொத்தம் ரூ.200 வழங்கப்படும். இந்த உதவித்தொகை முழுவதும் ஒரே நேரத்தில் பிரசவத்திற்கு முன்னதாகவோ குழந்தை பிறந்த உடனேயோ வழங்கப்படும்.

உதவிபெறத் தகுதி உள்ளவர்கள்

பதினெட்டு வயது நிரம்பிய, ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த, கருவுற்ற பெண்கள் அனைவரும் இத்திட்டத்தினால் பயனடையலாம். முதல் இரண்டு பிரசவத்திற்கு மட்டும் இந்த உதவி வழங்கப்படும்.

ஏழைக் குடும்பம் எது?

ஒரு குடும்பம் ஏழைக் குடும்பம் என்பதை எப்படித் தீர்மானிப்பது? அதற்கு, பின்வரும் அளவுகோல்கள் பின்பற்றப்படுகின்றன;

(1) நிலமற்ற விவசாயக் கூலிக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். அந்தக் குடும்பத்தில் அனைவரும் விவசாயக் கூலியாக வேலை செய்து பிழைப்பவர்களாக இருக்கலாம்.

(2) சிறு மற்றும் குறு விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம். அந்தக் குடும்பத்திற்குச் சொந்த நிலம் கூட இருக்கலாம். ஆனால் அந்த நிலம் நன்செய்யாக இருந்தால் 2.5 ஏக்கருக்கு அதிகமாகவும், புன்செய்யாக இருந்தால் 5 ஏக்கருக்கு அதிகமாகவும் இருக்கக்கூடாது. அல்லது இந்த இருவகை நிலமும் சேர்ந்து மொத்தம் 5 ஏக்கருக்கு மேல் போகக்கூடாது. ஒரு ஏக்கர் நன்செய் நிலம், இரண்டு ஏக்கர் புன்செய் நிலத்திற்குச் சமமாகக் கணக்கிடப்படும்.

(3) ஒரு குடும்பம் குத்தகை நிலத்தில் விவசாயம் செய்தால், ஒரு ஏக்கர் நன்செய் குத்தகை நிலம், அரை ஏக்கர் நன்செய் சொந்த நிலத்திற்குச் சமமாகவும், ஒரு ஏக்கர் புன்செய் குத்தகை நிலம், அரை ஏக்கர் புன்செய் சொந்த நிலத்திற்குச் சமமாகவும் கருதப்பட்டு, அதன் அடிப்படையில் சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலத்தின் அளவு கணக்கிடப்படும்.

(4) விவசாயம் சாராத வேலைகள் மூலம் வருமானம் பெற்று வாழும் குடும்பங்கள் விஷயத்தில், அந்தக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.5000 அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

(5) நிலவுடைமையைக் கணக்கிடும்பொழுது, உணவு தானியம் பயிரிடப்படும் நிலம்தான் எடுத்துக்கொள்ளப்படும். கரும்பு, வாழை, புகையிலை, மஞ்சள், மிளகாய், பாசனம் பெறும் பருத்தி, பாசனம் பெறும் நிலக்கடலை ஆகியவை பயிரிடப்பட்டால், மொத்த வருமானம் கணக்கில் கொள்ளப்படும். அது, ஆண்டுக்கு 5,000 ரூபாய்க்கு அதிகமாக இருக்க கூடாது.

விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பம் ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி அலுவலகங்களில் இலவசமாகக் கிடைக்கும், கிராமங்களிலும்,

நகரங்களிலும் உள்ள ஒவ்வொரு பெண்ணும் கருவுற்று இருப்பதை அருகில் உள்ள சுகாதார நிலையத்தில் பதிவு செய்து இருக்க வேண்டும். கருவுற்ற தாய்மார்கள் நிதி உதவிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, சுகாதார செவிலியரிடம் அல்லது உதவி மருத்துவ செவிலியரிடம் கொடுக்க வேண்டும். விண்ணப்பத் தைப் பூர்த்தி செய்ய, சத்துணவு ஊழியர்களும், குழந்தை நல அமைப்பாளர்களும் உதவி புரிவார்கள்.

வயதுக்கும், வருமானத்திற்கும் குடும்ப அட்டையில் குறிப்பிடப் பட்டுள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. குழந்தைகள் எண்ணிக்கை குறித்தும், கர்ப்ப காலத்தைக் குறித்தும், உதவி மருத்துவ செவிலியரிடம் (ANM) சான்றிதழ் பெற்றாலே போதுமானதாகும். தொடர்புடைய செவிலியர், விண்ணப்பத்தைச் சரிபார்த்து, விசாரித்து, கருவுற்ற தைப் பதிவு செய்திருப்பதாகச் சான்றளித்து, உதவித்தொகை அனுமதிக்காக, ஊராட்சி ஒன்றிய ஆணையர், நகராட்சி, மாநகராட்சி ஆணையருக்கு அவற்றை அனுப்புவார். அவர் உதவித்தொகையை அனுமதிப்பார். தொடர்புடைய செவிலியரே அந்தத் தொகையை வழங்குவார்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் முழுப்பொறுப்பு சமூக நலத்துறை இயக்குநரைச் சார்ந்தது. மாநகராட்சி ஆணையர்களும் நகராட்சி ஆணையர்களும் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையர் களும் இந்த உதவித்தொகை வழங்குவதற்கு அனுமதி அளிப்பார்கள்.

★ **இத்திட்டத்தின் மூலம் 1989 (ஏப்ரல் முதல்) 1990 நவம்பர் 30-ஆம் நாள் வரை, பயன்பெற்ற மகளிர் எண்ணிக்கை 3,53,161. வழங்கப்பட்ட தொகை ரூ.7.06 கோடி.**

கருவுற்ற மகளிர் நிதி உதவித் திட்டம்

''நகர்ப்புறத்திலும், கிராமப்புறத்திலும் வறுமையில் வாடும் ஏழை எளிய பெண்கள், கர்ப்பவதியாகும் பொழுதும், குழந்தை பெற்ற பின்னரும், உழைக்க முடியாமல், ஊதியம் ஈட்ட முடியாமல் இருப்பதால் அவர்களின் குடும்பங்கள் மேலும் ஏழ்மையில் தவிக்கும் நிலையில் இருந்து வருகின்றன. தேர்தல் அறிக்கையிலே கூறியுள்ளபடி, இதை நிவர்த்தி செய்வதற்காக, கர்ப்பவதியான 8-வது மாதத்திலிருந்து குழந்தை பெறும் வரையிலும், குழந்தை பிறந்த பின்னர் 2 மாதக் காலத்திற்கும், மாதம் ரூ.50 உதவித் தொகை மூலம் மொத்தம் ரூ.200 அவர்களுக்கு வழங்கப்படும். முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே இவ்வுதவி அளிக்கப்படும்.

—மாண்புமிகு முதல்வர் கலைஞர்

முதியோர் உதவித் தொகைத் திட்டம்

உற்றார் உறவினர் ஆதரவின்றி, வாழ வழியற்றவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, தமிழக அரசால் செயல் படுத்தப்படும் திட்டம், முதியோர் உதவித் தொகைத் திட்டமாகும்.

முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ், ஐந்து வகைகள் உள்ளன. அவை பின்வருமாறு:-

(அ) முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டம்

இத்திட்டத்தில் தகுதிபெற, ஆதரவற்ற நபர்களுக்குக் குறைந்த பட்சம் வயது வரம்பு 65 ஆகும். குருடு, தொழுநோய், மனநோய், பாரிச வாயு மற்றும் அவயவமிழந்து, வருவாய் ஈட்ட முடியாத, ஆதரவற்ற நபர்கள் உதவித்தொகை பெற, குறைந்தபட்ச வயது வரம்பு 60 ஆகும்.

(ஆ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம்

45 வயது நிரம்பிய, ஆதரவற்ற, உடல் ஊனமுற்றோர் இத் திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். கண்பார்வை அற்றவர்களுக்கு வயது வரம்பின்றி உதவித்தொகை வழங்கப்படும். உடல் ஊனம் 50 சதவீதத்திற்கு மேல் இருக்க வேண்டும். தொழுநோயாளிகளும்

இத்திட்டத்தின் கீழ், சலுகை பெறலாம். உடல் ஊனம் குறித்து அரசு மருத்துவரின் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

(இ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற விதவைகள்) திட்டம்

40 வயது நிரம்பிய, ஆதரவற்ற விதவைகள் இத்திட்டத்தின் கீழ், இதுவரை உதவித் தொகை பெற்று வந்தனர். இந் நிதியாண்டில் (1990-91) இந்நிதி உதவி பெறுவதற்கான வயது வரம்பு நீக்கப் பட்டுள்ளது.

(ஈ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம்

60 வயது நிரம்பிய, ஆதரவற்ற, வேளாண்மைத் தொழிலாளர் களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

(உ) முதியோர் உதவித்தொகை (கணவனால் கைவிடப்பட்ட மனைவியர்) திட்டம்

கணவனால் கைவிடப்பட்ட, ஆதரவற்ற, 30 வயதுக்குக் குறை யாத பெண்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவித்தொகை வழங்கப் படுகிறது. திருமணம் சட்டபூர்வமானதாக இருக்க வேண்டும். கணவனை விட்டுப் பிரிந்த காலம் 5 ஆண்டுகளுக்குக் குறைவில் லாமல் இருக்க வேண்டும். மறுமணம் செய்து கொண்டாலும், கணவரிடம் மறுபடியும் சேர்ந்தாலும், கைவிட்ட கணவரிடம் ஏதாவது உதவி பெற்றாலும், அல்லது வேலையில் சேர்ந்தாலும் உதவித்தொகை நிறுத்தப்படும்.

ஆதரவற்றவர்கள் என்பவர்கள் யார்?

1. எவ்வித வருமானமும் அல்லது வருமானம் தரக்கூடிய ஆதாரம் இல்லாதவரும், 20 அல்லது அதற்கு மேற்பட்ட வயது நிரம்பிய, அடியிற் குறிப்பிட்ட உறவினர்கள் இல்லாத நபர்கள்: (அ) மகன் (ஆ) மகனின் மகன்; மற்றும் (இ) கணவன்/மனைவி

2. வரிசை எண்.1-இல் குறிப்பிட்ட நபருடைய மேற்குறிப் பிட்ட உறவினர்கள் அத்தனை பேரும் எவ்வித வருமானம் அல்லது வருமானம் தரக்கூடிய ஆதரவற்றவர்களாக இருந்தாலும், அந்த நபர் ஆதரவற்றவராகக் கருதப்படுவார்.

3. வரிசை எண். 1-இல் குறிப்பிட்ட உறவினர்கள் தொடர்ந்து காணாமற்போய் விட்டதாக நிரூபிக்கப்பட்டாலும் அவர் ஆதரவற்ற வராகக் கருதப்படுவார்.

4. வரிசை எண். 1-இல் குறிப்பிட்டவர்கள் ரூ.1000-க்கு மேல் விலை மதிப்புப் பெறாத வீடு உள்ளவர்களும் வருமானம் அற்ற சிறுநிலம் உள்ளவர்களும் ஆதரவற்றவராகக் கருதப்படுவார்கள்.

இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் உதவிகள்

1. மாதம் ஒன்றிற்கு ரூ.50 வீதம் வழங்கப்படுகிறது.

2. ஆண்டுக்கு இருமுறை பொங்கல் பண்டிகை மற்றும் சுதந்திர நாளன்று உதவித்தொகை பெறும் ஆண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வேட்டியும், பெண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வண்ண/வெள்ளைச் சேலையும் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

3. நாள்தோறும் மதிய சத்துணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

செயல்படுத்தும் அலுவலர்கள்

வருவாய்த் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள். இதற்கான விண்ணப்பப் படிவம் வட்டாட்சியர் அலுவலகத்திலும் தனி வட்டாட்சியர் (நலிந்தோர் உதவித் திட்டம்) அலுவலகத்திலும் இலவசமாகக் கிடைக்கும்.

விண்ணப்பம் செய்யும் முறை

அச்சிட்ட விண்ணப்பத்தில் வயது, ஏழ்மை நிலை போன்ற விவரங்களை எழுதி, வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும்.

அச்சிட்ட விண்ணப்பம் கிடைக்காவிட்டால், முழு விவரங்களுடன் கையால் எழுதி அனுப்பலாம். விண்ணப்பதாரர் அண்மையில் எடுத்த புகைப்படத்தினையும் ஒட்டி அனுப்ப வேண்டும்.

ஊராட்சி ஒன்றியம், வட்டாட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகிய அலுவலகங்களில் விண்ணப்பங்கள் இலவசமாகக் கிடைக்கும்.

வட்டாட்சியர் தானே நேரில் விசாரித்து அல்லது தனது உதவி அலுவலர் மூலம் விசாரித்து, பரிசீலனைக்குப் பின்னர் தகுதியுடையவர்களுக்கு உதவித்தொகையை அனுமதிப்பார்.

எண்ணிக்கை வரம்பின்றி,
தகுதியுடைய அனைவருக்கும் உதவித்தொகை

1.5.89-க்கு முன்னர் முதியோர் உதவித் தொகை தரப்படும் எண்ணிக்கைக்கு வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த எண்ணிக்கை வரம்பு 1.5.89 முதல் முற்றிலும் நீக்கப்பட்டு விட்டது. இதன்படி, தகுதி உடைய அனைவரும் உதவித்தொகை பெறலாம்.

முதியோர் உதவித்தொகை பெற விண்ணப்பித்துக் காத்திருப்பவர்களின் விண்ணப்பங்களை ஆய்வு செய்து, அவர்களுக்கு உடனடியாக உதவித் தொகை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், முதியோர் நிதி உதவி பெறும் அனைவருக்கும் சத்துணவுக் கூடங்களில் மதிய உணவு வழங்கப்படுகிறது.

★ இத்திட்டத்தின் மூலம் 1989 (ஏப்ரல் முதல்) 1990 அக்டோபர் 31-ஆம் நாள் வரை, பயனடைந்தோர் எண்ணிக்கை 5,00,538. வழங்கப்பட்ட தொகை ரூ.51 கோடியே 59 இலட்சத்து 4 ஆயிரத்து 514.



குடும்பத் தலைவரை இழக்க நேரிடும் ஏழைக் குடும்பங்களுக்கு ரூ.3,000 நிதியுதவி

தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வரும் மற்றுமொரு சமூகப் பாதுகாப்புத் திட்டம், ஏழைக்குடும்பத் தலைவர் ஒருவர் இறந்து விட்டால் அவரது குடும்பத்திற்கு நிதியுதவி செய்யும் திட்டமாகும்.

குடும்பத்தலைவரை இழக்க நேரிடும் ஏழைக் குடும்பங்கள், திடீரென வருமான இழப்புக்கு ஆளாகி அவதியுறுகின்றன. அத் தகைய குடும்பங்கள் மறுவாழ்வு பெற உதவி செய்யும் வகையில், அவர்களுக்கு அரசின் மூலம் ரூ.2,000-மானியமாக அளிக்கப்பட்டு வந்தது. இந்த மானியம் இந் நிதியாண்டில் ரூ.3,000 ஆக உயர்த் தப்பட்டுள்ளது. இதற்காக ரூ.3 கோடி அளவுக்கு 1990-91 ஆண் டுக்கான நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாருக்குக் கிடைக்கும் இந்த உதவி?

ஏழைக் குடும்பத் தலைவர் ஒருவர் இறந்துவிட்டால் அவரை நம்பி வாழும் அந்தக் குடும்பத்திற்கு இந்தத் திட்டத்தின் கீழ் ரூ.3000 நிதியுதவி கிடைக்கும்.

பெற்றோரும், அவர்களது குழந்தைகளும் சேர்ந்ததே ஒரு குடும்ப மாகும். பல குடும்பங்கள் சேர்ந்து ஒரே கூட்டுக் குடும்பமாக

வாழ்ந்தாலும் அந்தக் குடும்பத்தில் உள்ள பெற்றோர்-குழந்தை களைக் கொண்ட குடும்பங்கள் ஒவ்வொன்றும் தனித்தனிக் குடும்ப மாகவே இந்தத் திட்டத்தின் கீழ் கருதப்படும். அந்தக் குடும்பத்தின் சம்பாதிக்கும் நபர்தான் (அவர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும்), அந்தக் குடும்பத்தின் தலைவராகக் கருதப்படுவார். ஒரு குடும்பத் தலைவர், ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவரா இல்லையா என்பதைத் தீர்மானிக்க, அவரின் எல்லா வகையான வருமானங் களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

ஒரு குடும்பத் தலைவர் தனது முதுமை காரணமாகவோ, உடல் ஊனமுற்றதாலோ, வேலை செய்து சம்பாதிக்க முடியாமல் போனால், அந்தக் குடும்பத்தின் சம்பாதிக்கும் முக்கிய அங்கத்தினர் குடும்பத் தலைவராகக் கருதப்படுவார். எனினும், குடும்பத் தலைவர் சம் பாதிப்பவராக இருந்து அந்தக் குடும்பத்தில் சம்பாதிக்கும் இன்னொரு அங்கத்தினர் இறந்து விட்டால், அவர் இந்தத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற முடியாது.

ஏழைக் குடும்பம் எது?

ஒரு குடும்பம் ஏழைக் குடும்பம் என்பதை எப்படித் தீர்மானிப்பது? அதற்கு, பின்வரும் அளவுகோல்கள் பின்பற்றப்படுகின்றன;

(1) நிலமற்ற விவசாயக் கூலிக்குடும்பங்களைச் சேர்ந்தவர் களாக இருக்கலாம். அந்தக் குடும்பத்தில் அனைவரும் விவசாயக் கூலியாக வேலை செய்து பிழைப்பவர்களாக இருக்கலாம்.

(2) சிறு மற்றும் குறு விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர் களாகவும் இருக்கலாம். அந்தக் குடும்பத்திற்குச் சொந்த நிலம் கூட இருக்கலாம். ஆனால் அந்த நிலம் நன்செய்யாக இருந்தால் 2.5 ஏக்கருக்கு அதிகமாகவும், புன்செய்யாக இருந்தால் 5 ஏக்கருக்கு அதிகமாகவும் இருக்கக்கூடாது. அல்லது இந்த இருவகை நிலமும் சேர்ந்து மொத்தம் 5 ஏக்கருக்கு மேல் போகக்கூடாது. ஒரு ஏக்கர் நன்செய் நிலம், இரண்டு ஏக்கர் புன்செய் நிலத்திற்குச் சமமாகக் கணக்கிடப்படும்.

(3) ஒரு குடும்பம் குத்தகை நிலத்தில் விவசாயம் செய்தால், ஒரு ஏக்கர் நன்செய் குத்தகை நிலம், அரை ஏக்கர் நன்செய் சொந்த நிலத்திற்குச் சமமாகவும், ஒரு ஏக்கர் புன்செய் குத்தகை நிலம், அரை ஏக்கர் புன்செய் சொந்த நிலத்திற்குச் சமமாகவும் கருதப் பட்டு, அதன் அடிப்படையில் சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலத்தின் அளவு கணக்கிடப்படும்.

(4) விவசாயம் சாராத வேலைகள் மூலம் வருமானம் பெற்று வாழும் குடும்பங்கள் விஷயத்தில், அந்தக் குடும்பத்தின் ஆண்டு

வருமானம் ரூ.5,000 அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

(5) நிலவுடைமையைக் கணக்கிடும்பொழுது, உணவு தானியம் பயிரிடப்படும் நிலம்தான் எடுத்துக்கொள்ளப்படும். கரும்பு, வாழை, புகையிலை, மஞ்சள், மிளகாய், பாசனம் பெறும் பருத்தி, பாசனம் பெறும் நிலக்கடலை ஆகியவை பயிரிடப்பட்டால், மொத்த வருமானம் கணக்கில் கொள்ளப்படும். அது, ஆண்டுக்கு 5,000 ரூபாய்க்கு அதிகமாக இருக்கக்கூடாது.

உதவி கோர உரிமையுடையோர் யார்?

ஒரு குடும்பத் தலைவர் இறந்துவிட்டால், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உதவி கோரலாம். ஆனால் அவர்கள், பின்வரும் முன்னுரிமை வரிசைப்படிதான் உதவி கோர முடியும்:-

1. இறந்தவரின் மனைவி அல்லது இறந்தவரின் கணவர்.

2. இறந்தவரின் திருமணமாகாத மூத்தமகன் அல்லது மூத்த மகள்; இவர்கள் வயதுக்கு வராதவர்களாக இருந்தால் அவர்களது பாதுகாவலர்.

3. இறந்தவரின் தந்தை அல்லது தாய்.

4. இறந்தவரைச் சார்ந்திருந்த அவரது மூத்த பேரன் அல்லது பேத்தி; அவர்கள் வயதுக்கு வராதவர்களாக இருந்தால், அவர்களது பாதுகாவலர்.

5. இறந்தவரோடு வாழ்ந்திருந்த, அவரை நம்பியிருந்த, மூத்த குடும்ப அங்கத்தினர் எவரேனும்.

செயல்படுத்தும் அலுவலர்கள்

வருவாய்த்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவார்கள். இதற்கான விண்ணப்பப் படிவங்கள், வட்டாட்சியர் (நலிந்தோர் உதவித்திட்டம்) அலுவலகத்தில் இலவச மாகக் கிடைக்கும்

எப்படி விண்ணப்பிக்க வேண்டும்?

சம்பாதிக்கும் ஒரு குடும்பத்தலைவர் இறந்துவிட்டால், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர், இந்தத் திட்டத்தின் கீழ் உதவிகேட்டு, நிர்ணயப் படிவத்தில், கிராம நிர்வாக அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும். குடும்பத் தலைவர் மரணம் பற்றி ஊராட்சித் தலைவரின் சான்று அந்த விண்ணப்பத்தோடு இணைக் கப்பட வேண்டும். மரணம் நேர்ந்த 6 மாதத்திற்குள் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

விண்ணப்பத்தில் கொடுத்துள்ள விவரங்கள் சரியானவை தானா என்று, கிராம நிர்வாக அலுவலர் நேரில் சென்றுவிசாரித்து அறிந்து, தனது அறிக்கையை அதற்கென நிர்ணயித்துள்ள படிவத் தில், விண்ணப்பம் பெற்ற 7 நாட்களுக்குள் வருவாய் ஆய்வாள ருக்கு அனுப்புவார். அத்துடன் அவர் இது சம்பந்தமாகப் பதிவேடு ஒன்றையும் பராமரிப்பார்.

நிதியுதவி எப்படிக் கிடைக்கும்?

வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலரின் விசா ரணை அறிக்கையைப் பரிசீலனை செய்து, நேரடி விசாரணைக்குப் பிறகு, தனது பரிந்துரையை, நிர்ணயித்துள்ள படிவத்தில், 10 நாட்களுக்குள், வட்டாட்சியருக்கு (நலிந்தோர் உதவித்திட்டம்) அனுப்புவார். அத்துடன் அவரும் இது சம்பந்தமாகப் பதிவேடு ஒன்றையும் பராமரிப்பார்.

கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் ஆகிய இரு வரின் அறிக்கைகளையும் பரிசீலனை செய்து, வட்டாட்சியர் (நலிந்தோர் உதவித்திட்டம்) நிதியுதவி ஆணை பிறப்பிப்பார். அவரது அலுவலகத்திற்கு நேரில் சென்று விண்ணப்பதாரர் நிதி யுதவியைக் காசோலையாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

★ இத்திட்டத்தின் மூலம் 1989 (ஏப்ரல் முதல்) 1990 அக்டோபர் 31-ஆம் நாள் வரை பயனடைந்தோர் எண்ணிக்கை 21,071; வழங்கப்பட்ட தொகை ரூ.4 கோடியே 92 இலட்சத்து இரண்டாயிரம்.



விபத்தில் இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ.10,000 நிதியுதவி

தமிழ்நாடு அரசின் சமூகப் பாதுகாப்பு-மனித நேயத் திட்டங்களில் ஒன்று, விபத்தில் இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ.10,000 நிதியுதவி வழங்கும் திட்டமாகும்.

இந்தத் திட்டத்தின்கீழ், உதவி பெற இருந்து வந்த ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3,500 என்பதை நீக்கி, அந்தப் பிரிவினரோடு மேலும் சில பிரிவினர்களையும் சேர்த்து, 1989-90-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.

அதனையொட்டி, விவசாயத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், ஓட்டுநர்கள் போன்ற ஏழைத் தொழிலாளிகள் பயன்பெறும் விபத்து நிதியுதவித் திட்டத்திற்கான புதிய உத்தரவு ஒன்றை 23.5.1989 அன்று அரசு பிறப்பித்துள்ளது. அதன்படி, பின்வரும் தொழிலாளர்கள் விபத்து நிதியுதவி பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

யாருக்குக் கிடைக்கும் இந்த உதவி?

1 சலவைத் தொழிலாளர்கள்
2 காலணி தயாரிக்கும் தொழிலாளர்கள்

3 தச்சுத் தொழிலாளர்கள், வண்டி கட்டுவோர்
4 விலங்குகள் இழுக்கும் வண்டி ஓட்டுநர்கள்
5 இரும்பு, உலைக்கள வேலை செய்வோர்
6 பொன், வெள்ளி வேலை செய்வோர்
7 கூடை முடைவோர்
8 கல் வெட்டுவோர், கல் செதுக்குவோர், பூச்சுவேலை செய்வோர்
9 ஓட்டு வேலை செய்வோர்
10 செங்கல் தொழிலாளர்
11 கிணறு கட்டுவோர்
12 கிணறு தோண்டுவோர்
13 விவசாயத் தொழிலாளர், சிறு, குறு விவசாயிகள் (2.5 ஏக்கருக்குக் குறைவாக நிலமுள்ளவர்கள்)
14 பதநீர் இறக்குவோர்
15 வடிகால் தொழிலாளர்
16 பூச்சி மருந்து தெளிப்பவர்கள்
17 பனை, தென்னை மரம் ஏறுபவர்கள்
18 மீனவர்கள் (கூட்டுறவுச் சங்க அங்கத்தினர் அல்லாதவர்கள்)
19 கட்டட, கட்டுமானத் தொழிலாளர்கள்
20 டிரக் ஓட்டுநர்கள்
21 ஆட்டோ, ரிக்ஷா ஓட்டுநர்கள்
★22 தனியார் கார், டாக்சி, பேருந்து ஓட்டுநர்கள்
23 முடி திருத்துபவர்
24 கைவண்டி இழுப்போர்
25 மிதிவண்டி ஓட்டுநர்
26 தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்கள்
27 மட்பாண்டம் மற்றும் மண்பொம்மைகள் செய்யும் குயவர், குலாளர் மற்றும் வேளார்
28 வீடுகளில் பணிபுரிவோர்
29 பாம்பு பிடிக்கும் தொழிலில் ஈடுபடுவோர்
30 சினிமா படப்பிடிப்பின் போது சம்பந்தப்பட்ட சினிமா தொழிலாளர்கள் (சினிமா நடிகர்கள் தவிர) விபத்தில் இறந்தாலோ/காயமுற்றாலோ
31 தினக்கூலி பெறும் செங்கல் தொழிலாளர்கள் விபத்தில் இறந்தாலோ/காயமுற்றாலோ
32 லாரிகளில் பாரம் ஏற்றி, இறக்கும் ஏழைத் தொழிலாளர்கள் விபத்தில் இறந்தாலோ/காயமுற்றாலோ

★ ஓட்டுநர்களுக்கு வாகனங்கள் சொந்தமாக இருக்கக்கூடாது. இந்தத் திட்டத்தின் கீழ் உதவிபெற, ஆண்டு வருமான உச்ச வரம்பு எதுவும் கிடையாது.

33 கட்டடம் மற்றும் கட்டுமானங்களில் வேலை பார்க்கும் ஏழைத் தொழிலாளர்களான, வெள்ளை அடிப்பவர்கள், வண்ணம் பூசுவோர்கள் மற்றும் மின்வினைஞர்கள் விபத்தில் இறந்தாலோ/காயமுற்றாலோ

34 ஏழை தையல் தொழிலாளர்கள் விபத்தில் இறந்தாலோ/காயமுற்றாலோ

35 ஏழை கிராமிய நடனம் மற்றும் நையாண்டி மேளக் கலைஞர்கள்.

36 கல்யாணம் மற்றும் இதர விசேஷசங்கங்களுக்குச் சமையல் செய்யும் ஏழை சமையல் கலைஞர்கள்.

37 *1948*-ஆம் ஆண்டைய தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படாத மாவு மில்களில் பணிபுரியும் தொழிலாளர்கள்.

38 தனியார் பேருந்தில் பணிபுரியும் நடத்துநர்கள்.

யாருக்கு எவ்வளவு உதவி கிடைக்கும்?

1 மரணமடைவோர்
2 தோள்பட்டைவரை இரு கைகளும் இழப்போர்
3 இடுப்புக்குக் கீழ் இரு கால்களும் இழப்போர்
4 இரு கைகள் அல்லது இரு கால்கள் முற்றிலும் விபத்தினால் செயல்படுத்த முடியாமல் பாதிக்கப்படுவோர்.
5 இரு கண்களும் இழப்போர்.
6 ஒரு கையும் ஒரு காலும் முற்றிலும் விபத்தினால் செயல்படுத்த முடியாமல் பாதிக்கப்படுவோர்-

ஆகிய இந்த 6 பிரிவினருக்கும் நிதியுதவி ரூ.10,000.

1 தோள்பட்டைக்குக் கீழேயும் மணிக்கட்டுக்கு மேலேயும் ஒரு கையை இழப்போர்.
2 இடுப்புக்குக் கீழேயும் கணுக்காலுக்கு மேலேயும் ஒரு காலை இழப்போர்.
3 ஒரு கண்ணை இழப்போர்-

ஆகிய இந்த 3 பிரிவினருக்கும் நிதியுதவி ரூ.7,000

1 மணிக்கட்டில் கை அல்லது கைகளை இழப்போர்
2 கணுக்காலில் கால் அல்லது கால்களை இழப்போர்
3 ஒரு கால் அல்லது ஒரு கை முற்றிலும் விபத்தினால் செயல் படுத்த முடியாமல் பாதிக்கப்படுவோர்-

ஆகிய இந்த மூன்று பிரிவினருக்கும் ரூ.5,000.

செயல்படுத்தும் அலுவலர்கள்

இந்தத் திட்டம் துயர் துடைப்பு வட்டாட்சியர் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் செயல்படுத்தப்படுகிறது.

''விபத்து'' என்பதற்கான விளக்கம்:

வெளிப்படையான, வன்மையான செயல்களால் ஏற்படும் மரணம் அல்லது பார்வைக்குப் புலனாகும்படி உடம்பில் ஏற்பட்டுள்ள காயங்கள் ''விபத்து'' எனக் கொள்ளப்படும். குடிபோதையிலோ, சட்டத்தை மீறிச் செயல்பட்டோ ஏற்படும் விபத்து இதில் அடங்காது. அணுக்கதிர் வீச்சு, போர் அல்லது சமுதாயம் முழுவதையும் பாதிக்கும் அழிவுகளால் உண்டாகும் மரணம் அல்லது காயம் இதில் அடங்காது.

மற்றப்படி, வேலை செய்யும் போதோ, வேறு சமயங்களிலோ ஏற்படும் விபத்துக்கள் இந்தத் திட்டத்தின் கீழ், உதவிபெறத் தகுதியானவையாகும். மின் அதிர்ச்சியினால் ஏற்படும் மரணம், காயம் இதில் அடங்கும்.

உதவி கோர உரிமையுடையோர் யார்?

விபத்தில் ஒருவர் இறந்துவிட்டால், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இந்தத் திட்டத்தின்கீழ், உதவி கோரலாம். ஆனால் அவர்கள், பின்வருமாறு முன்னுரிமை வரிசைப்படிதான் உதவி கோரமுடியும்.

1. இறந்தவரின் மனைவி அல்லது இறந்தவரின் கணவர்

2. இறந்தவரின் திருமணமாகாத, அவரை நம்பியிருந்த மூத்த மகன் அல்லது மூத்த மகள்; இவர்கள் வயதுக்கு வராதவர்களாக இருந்தால், அவர்களது பாதுகாவலர்.

3. இறந்தவரின் தந்தை அல்லது தாய்.

4. இறந்தவரைச் சார்ந்திருந்த அவரது மூத்த பேரன் அல்லது பேத்தி; இவர்கள் வயதுக்கு வராதவர்களாக இருந்தால் அவர்களது பாதுகாவலர்.

5. இறந்தவரோடு வாழ்ந்திருந்த, அவரை நம்பியிருந்த, மூத்த குடும்ப அங்கத்தினர் எவரேனும்.

செயல்படுத்தும் அலுவலர்கள்

வருவாய்த் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவார்கள். இதற்கான விண்ணப்பப் படிவம், வட்டாட்சியர் (நலிந்தோர் உதவித் திட்டம்), வருவாய் அலுவலகங்களில் இலவசமாகக் கிடைக்கும்.

எப்படி விண்ணப்பிக்க வேண்டும்?

விபத்து ஏற்பட்ட உடனே, அவரைச் சார்ந்திருந்த அவரது குடும்ப அங்கத்தினர், நிர்ணயப் படிவத்தில் கிராம நிர்வாக

அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும். மரணம் சம்பவித்தது அல்லது விபத்தால் ஊனமாக்கப்பட்டது சம்பந்தமாக, அரசு மருத்துவரிடமிருந்து பெற்ற சான்றிதழையும் அதனோடு இணைக்க வேண்டும். விபத்தைக் காவல் துறையினர் பதிவு செய்திருந்தால், சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தின் சான்றிதழையும் சேர்க்க வேண்டும். விபத்து நடந்த 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பம் எல்லா வகையிலும் பூர்த்தியான தாக இருக்க வேண்டும்.

விண்ணப்பத்தில் கொடுத்துள்ள விவரங்கள் சரியானவை தானா என்று, கிராம நிர்வாக அலுவலர் நேரில் சென்று விசாரித்து அறிந்து, தனது அறிக்கையை அதற்கென நிர்ணயித்துள்ள படிவத் தில், விண்ணப்பம் பெற்ற 7 நாட்களுக்குள் வருவாய் ஆய்வாள ருக்கு அனுப்புவார். பாதிக்கப்பட்டவர் பார்த்து வந்த வேலை சம் பந்தமாக, அந்தக் கிராமத்தின் நிரந்தரக் குடியிருப்பாளர்கள் இரு வரின் வாக்கு மூலங்களை அவர் பதிவு செய்வார். இந்த இருவரில் ஒருவர் ஊராட்சி உறுப்பினராக இருக்க வேண்டும்.

இந்த நிதியுதவி எப்படிக் கிடைக்கும்?

வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலரின் விசாரணை அறிக்கையைப் பரிசீலனை செய்து, நேரடி விசாரணைக்குப் பிறகு, தனது பரிந்துரையை, நிர்ணயித்துள்ள படிவத்தில், 10 நாட்களுக் குள் வட்டாட்சியருக்கு (நலிந்தோர் உதவித் திட்டம்) அனுப்புவார்.

கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் இருவரும் இது சம்பந்தமாகப் பதிவேடு ஒன்றையும் பராமரிப்பார்கள்.

கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் ஆகிய இரு வரின் அறிக்கைகளையும் பரிசீலனை செய்து, வட்டாட்சியர் (நலிந்தோர் உதவித் திட்டம்) நிதியுதவி ஆணை பிறப்பிப்பார்; அவரது அலுவலகத்திற்கு நேரில் சென்று, விண்ணப்பதாரர் நிதியுதவியைக் காசோலையாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தத் திட்டத்தைப் பற்றிய மேல் முறையீட்டிற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகவும்.

★ இத்திட்டத்தின் மூலம் 1989 (ஏப்ரல் முதல்) 1990 அக்டோபர் 31-ஆம் நாள் வரை பயனடைந்தோர் எண்ணிக்கை 880; வழங்கப்பட்ட தொகை 79 இலட்சத்து 30 ஆயிரம்.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்

தீண்டாமை உணர்வு சமூகத்தைப் பிடித்துள்ள சீர்கேடு. தீண்டாமை உணர்வை ஒழிக்க வேண்டி, பண்டைக் காலம் முதல் சமயப் பெரியோர்களும், தலைவர்களும் பாடுபட்டு வந்துள்ளனர். தேசப்பிதா காந்தியடிகள், தந்தை பெரியார் போன்றோர், தீண்டாமை உணர்வு, சாதி சமய உணர்வு ஆகியவற்றை, மக்கள் மனதிலிருந்து அகற்றப் பெரும்பாடுபட்டுள்ளனர். இதனை ஆக்கப்பூர்வமாகச் செயல்படுத்தும் நோக்குடன், 1968-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராயிருந்த போது, கலப்பு மணம் செய்து கொள்ளும் தம்பதியர்க்குத் தங்கப்பதக்கமும், பணமும் அளித்து உதவும் திட்டத்தை ஏற்படுத்தினார்கள். இத்திட்டத்தில், மேலும் சில சலுகைகளை அளித்து, கடந்த 29.9.1989-ஆம் நாள் முதல், அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்குத் திருமணச் செலவிற்காக ரூ.1,000 உதவிப்பணம் வழங்கப்படுகிறது. அத்துடன் தம்பதியர் இருவர் பெயரிலும் ரூ.4,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்பட்டு, 6

ஆண்டுகளுக்குப் பின் பலனளிக்கும் வகையில் அளிக்கப்படுகின்றது. தவிர, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவப்படுத்துகிறார்.

கலப்பு மணச் சலுகை பெறத் தகுதியுள்ளவர்கள்

(1) தம்பதியர் ஆதிதிராவிட வகுப்பினர் அல்லது பழங்குடி வகுப்பினராக இருந்து முற்பட்ட வகுப்பினரைத் திருமணம் செய்ய வேண்டும்.

(2) தம்பதியர், ஆதிதிராவிட வகுப்பினர் அல்லது பழங்குடி வகுப்பினராக இருந்து பின்தங்கிய வகுப்பில் திருமணம் செய்ய வேண்டும்.

(3) ஆதிதிராவிட வகுப்பினர் அல்லது பழங்குடி வகுப்பினர், மிகவும் பின்தங்கிய வகுப்பில் திருமணம் செய்ய வேண்டும்.

(4) முற்பட்ட வகுப்பினராயிருந்து, பின்தங்கிய வகுப்பில் அல்லது மிகவும் பின்தங்கிய வகுப்பில் திருமணம் செய்ய வேண்டும்.

தம்பதியர் இருவரின் வருமான வரம்பு

கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியர் இருவரின் (கணவன், மனைவி) வருமானம், ஆண்டு ஒன்றுக்கு ரூ.12,000-க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

திருமணம் செய்யும் முறை

கலப்புத் திருமணங்கள், இந்து மத முறைப்படியோ சுய மரியாதைத் திருமணம் ஆகவோ இருக்கலாம். ஆனால் திருமணம், கட்டாயமாகத் திருமணப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப் பட வேண்டும். பதிவு செய்யப்படாத திருமணங்களுக்குச் சலுகை வழங்கப்படுவதில்லை.

விண்ணப்பிக்கக் கால வரம்பு

கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியர் பதிவுத் திருமணம் செய்து கொண்ட நாளிலிருந்து, அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பம் செய்யும் முறை

கலப்புத் திருமணத் தம்பதியர், சலுகை வேண்டி, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, கீழ்க்கண்ட சான்றிதழ்களுடன், நேரிலோ, தபால் மூலமாகவோ விண்ணப்பம் செய்யலாம்.

(1) பதிவுத் திருமணம் செய்து கொண்டதற்கான சான்று.

(2) மணமகன், மணமகள் சாதிச்சான்று.

(3) தம்பதியர் இருவரின் ஆண்டு வருமானம் குறித்து வழங்கப் பட்ட சான்று.

விண்ணப்பம், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் சேர்ந்த வுடன் தம்பதியர் வாழும் வட்டத்திலுள்ள தனி வட்டாட்சியர், நேரடி விசாரணை செய்து தம்பதியர் கலப்பு மணச்சலுகை பெறத் தகுதியுள்ளவர்களா என ஆய்வு செய்து, அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்புவார். இதன் அடிப்படையில் கலப்பு மணச் சலுகைகள் வழங்கப்படும்.

கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளின் குழந்தை களுக்கென்று ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பில் 12 இடங்களும், பி.எஸ்.எம். & எஸ். படிப்பில் 2 இடங்களும், இந்திய முறை மருத்துவத்தில் பார்மசி பட்டப் படிப்பில் 1 இடமும், பொறியியல் பட்டப்படிப்பில் 5 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இச்சலுகைகளை வழங்க, தென்னார்க்காடு மாவட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலருக்கும் (ஆதிதிராவிடர் நலம்), இதர மாவட்டங் களில் அந்தந்த மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர்களுக்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசு வேலை வாய்ப்பகங்களில் கலப்பு மணத் தம்பதி யர்கள் பதிவு செய்திருந்தால், அங்கிருந்து அரசு வேலைகளுக்குப் பட்டியல் அனுப்பி வைக்கப்படும்போது, அவர்களுக்கு முன் னுரிமை அளிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை நகரைத் தவிர, மற்ற இடங்களில் வசிக்கும் கலப்பு மணத் தம்பதியினருக்கு அவர்களுக்கெனச் சொந்தமாக மனை/வீடு இல்லாமல் இருப்பின், 3 சென்ட் பரப்புள்ள வீட்டு மனை ஒப்படை செய்யப்படும்.

சென்னையில் வசிக்கும் தம்பதியினருக்குத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் மூலமாகக் கைத்திறன் பணியாளர்களுக்கான மனை/வீடு இவற்றினைத் தவணைக் கொள் முதல் திட்டத்தின் கீழ் வாங்குவதற்கென ரூ.1,200 முன் பணமாக (அதாவது முதல் தவணைத் தொகையாக) செலுத்தும் பொருட்டு மொத்த மானியமாக வழங்கப்படும்.

மாதம் ரூ.250-க்குக் குறைந்த வருமானமுள்ள கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ், ஒவ் வோராண்டும் 10 வீடுகளைத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒதுக்கீடு செய்யும்.

★ இத்திட்டத்தின் மூலம் 1989 (ஏப்ரல் முதல்) 1990 நவம்பர் 30-ஆம் நாள் வரை, 1,005 தம்பதியர் பயன்பெற்றனர். வழங்கப்பட்ட தொகை ரூ.47.87 இலட்சம்.

நிலமற்ற ஏழை மக்களுக்கு நிலப்பட்டா வழங்கும் திட்டம்

பயிரிடத்தக்க தரிசு நிலங்கள், தகுதிவாய்ந்த நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகின்றன. 5 நபர்களோ அதற்குக் குறைவாகவோ உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக வருமானமிருப்பின் அவர் ''ஏழை'' எனக் கருதப்படுகிறார். அவ்வாறே ஒரு குடும்பத்தில் 5 நபர்களுக்கு மேல் இருப்பின் அக்குடும்பத்தின் மாத வருமானம் ரூபாய் 250 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் குடும்பத் தலைவர் ''ஏழை'' என்று கருதப்படுகிறார்.

2. அரசு நிர்ணயித்துள்ள முன்னுரிமைப் பட்டியல் வரிசைப்படி தகுதியுள்ள நபர்களுக்கு நில ஒப்படை வழங்கப்படுகின்றது. இப்பட்டியலில், போரில் வீர மரணமடைந்த இராணுவத்தினரின் குடும்பத்தினரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த நிலமற்றோரும் முதலிடம் பெறுகின்றனர்.

3. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில், ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பும் அவர் ஏற்கனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும் சேர்ந்து, உயர் அளவு பரப்பு 3 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலம் மட்டுமே ஒப்படை செய்யலாம் என நிர்ணயிக்கப்

பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த உயரளவு, அம் மாவட்டத்தில் நிலங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை என்பதனால், 1 ஏக்கர் புன்செய் அல்லது 0.50 ஏக்கர் நன்செய் என நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

4. நிலம் ஒப்படை பெற்ற 3 ஆண்டுகளுக்குள் பயிர் செய்யப் பட வேண்டும் எனவும், 10 ஆண்டுக் காலத்திற்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி உரிமை மாற்றம் செய்யவோ கூடாது எனவும், நிபந்தனைகளுடன் நிலங்கள் ஒப்படை செய்யப்படுகின்றன. இருப் பினும், பயிரிடுவதற்குக் கடன் வாங்கும் பொருட்டு, நிலங்களை வங்கிகளில் அடமானம் வைக்கலாம். ஆனால் நிலத்தை ஒப்படை பெற்றவரோ, அன்றி, அவரது குடும்ப உறுப்பினர்களோ, அன்றி, கூலி பெறும் தொழிலாளர்களைக் கொண்டோ தான் நிலத்தைப் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தைப் பயிரிடக்கூடாது. ஒப்படை நிபந்தனைகள் மீறப்பட்டால், எவ்வித நஷ்டஈடும் கொடுக் காமல் நிலத்தை மீண்டும் அரசு எடுத்துக் கொள்ளலாம்.

5. 1989 ஏப்ரல் திங்கள் முதல், 1990 ஜனவரித் திங்கள் வரை 2,324.528 எக்டேர் பரப்பளவுள்ள நிலங்களுக்கு 5,335 வேளாண்மை நிலப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

6. பொதுத் தேவைகளுக்கு உரிய சமுதாய நிலங்கள் யாவும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில், கால்வாய், ஓடை மற்றும் நீர்ப்பரப்பு நிலங்கள் போன்ற அனைத்து நீர்வழிப் புறம் போக்குகளையும், மாட்டுத் தொழுவம், மந்தைவெளி மற்றும் மேய்ச்சல் புறம்போக்குகளையும் ஒப்படை செய்வதிலிருந்து அரசு தடை விதித்துள்ளது.

7. இயற்கைச் சூழல் சமன்பாட்டினைப் பாதுகாப்பதற்கும், நில அரிப்பினைத் தடுக்கவும் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் வேளாண்மைக்கான நில ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. மேலும் ஆட்சேபகரமான ஆக்கிர மிப்புக்களை அகற்றுவதன் மூலமாகவும், தகுதியான ஆக்கிரமிப்புக் களை வரன்முறைப்படுத்துவதன் மூலமாகவும் இம்மாநிலத்திலுள்ள மலைப்பிரதேசங்களில் இயற்கைச் சூழலின் சமன்பாட்டினைப் பாதுகாப்பதற்கான பல்வேறு அணுகுமுறைகள், இன்னபிறவற்றைக் கண்டறிந்து அரசுக்கு அறிக்கை தர, சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவினையும் அரசு நியமித்துள்ளது.

விண்ணப்பங்களை அந்தந்தப் பகுதி வட்டாட்சியருக்கு அனுப்பிட வேண்டும்.

★ **நிலமற்ற ஏழை மக்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் 30.9.90 வரை - 1,38,772 ஏக்கர்; பயனடைந்தவர்கள் எண்ணிக்கை 1,14,130: இதில் ஆதி திராவிடர்கள் 52,185, பழங்குடியினர் 97, மற்றவர்கள் 61,848.**

வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டம்

பொருளாதார நிலையில் நலிவுற்ற பிரிவினரின் மேம்பாட்டினை முதன்மையாகக் கொண்டு பொது மக்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் வகையில் நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

2. மாநிலம் முழுவதும் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் (கிராம நத்தம், தீர்வை ஏற்பட்ட மற்றும் தீர்வை ஏற்படாத தரிசு) குடியிருந்துவரும் குடும்பங்களுக்கு அக்குடும்பத்தின் வருட வருமானம் ரூ.3,500/-க்கு மிகாமல் உள்ள பட்சத்தில் அக்குடும்பம் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பமாகக் கருதப்பட்டு வீட்டுமனைப்பட்டாக்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஏனையோர்க்கு அக்குடும்பத்தின் வருமான வரம்பின் அடிப்படையில் அங்காடி மதிப்பீட்டில் ஒரு மடங்கோ அல்லது இரு மடங்கோ வசூலித்துக் கொண்டு வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதில், போரில் வீர மரண மடைந்த அல்லது இயலாமையில் உள்ள இராணுவ வீரர்கள் குடும்பங்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள், நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள், முன்னாள் படைவீரர்கள், கொத்தடிமைச் சட்டத்

தின் கீழ் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், பர்மா ஆகிய நாடு களிலிருந்து தாயகம் திரும்பியவர்கள், தங்கக் கட்டுப்பாடு ஆணை யினால் வேலையிழந்த பொற்கொல்லர்கள் முதலியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பெண்கள் முன்னேற்றம் மற்றும் நலத்தை ஊக்குவிக்கும் வகையில் தற்போது பொதுவாக இவ்வொப் படைகள் பெண்டிர் பெயரில்தான் செய்யப்படுகின்றன.

வீட்டுமனைப் பட்டா பெற்ற அனைவருக்கும் சாதி, இன வேறு பாடின்றி தேசிய வங்கிகளில் ஒப்படை செய்த வீட்டுமனையை அடமானம் வைத்து வீடு கட்டுவதற்குத் தேவையான பணத்தைக் கடனாகப் பெறுவதற்கு, அரசாணை வழி வகை செய்கிறது. விண்ணப்பங்களை அந்தந்தப் பகுதி வட்டாட்சியருக்கு அனுப்பிட வேண்டும்.

★ **1990-91-இல் 3.25 இலட்சம் வீட்டு மனைகள் ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 1990 செப்டம்பர் வரை, 1.44 இலட்சம் மனைப் பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.**

ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்

பெண் இனத்தைப் போற்றிப் பெருமைப்படுத்தி வரும் தமிழ்நாடு அரசு, வேலைவாய்ப்பில் அவர்களுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளதை அனைவரும் அறிவர்.

மகளிர் கல்வி மேன்மையுற, மற்றுமொரு திட்டமாக, இளங் கலைப் பட்டப் படிப்பு வரை கல்வி இலவசம் என அரசு அறிவித் துள்ளது. மகளிருக்கான இந்த இலவசக் கல்வித் திட்டத்திற்கு ''ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்'' என்று பெயர்.

தமிழகத்திலுள்ள எல்லா ஏழை, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கும், 1989-90-ஆம் கல்வி ஆண்டிலிருந்து எல்லா அரசு மற்றும் தனியார் கலை, அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப் படிப்பு வரை கல்வி இலவசமாக வழங்கப் படுகிறது. பட்டப் படிப்பில் சேரும் பெண்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த உதவியினைப் பெற, பெற்றோரின் ஆண்டு வருமானம் 12,000 ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது.

விண்ணப்பங்களை மாவட்ட சமூகநல அலுவலருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

★ **இத்திட்டத்தின் மூலம் 1989-90-ஆம் ஆண்டில் 5,444 மாணவிகள் பயன்பெற்றனர். ரூ.14.17 இலட்சம் செலவாகியது. 1990-91-ஆம் ஆண்டிற்கு ரூ.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.**

சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை இருதய அறுவைச் சிகிச்சைக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோயினாலும், இருதயம் சம்பந்தப் பட்ட நோயினாலும் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு, உதவி செய் திடும் பொருட்டு, இன்றைய தமிழ்நாடு அரசு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5,000/- நிதியுதவி செய்யப் படுகிறது. 23.5.89-லிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

இந்த நிதியுதவியைப் பெற விரும்புவோர், தமிழக முதல்வருக்கு விண்ணப்பித்துத்தான் இவ்வுதவியைப் பெற முடியும் என்ற நிலை முன்பு இருந்தது. இந்தத் திட்டம் பொது மக்களுக்கு விரைவாகவும், உரிய நேரத்திலும் சென்றடைய வேண்டும் எனும் நோக்கில், இப்போது சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, இந்த நிதியுதவியினை வேண்டி, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு விண்ணப்பம் செய்தாலே போதும். மாவட்ட ஆட்சித் தலைவரே இந்த நிதியுதவி வழங்கப்படுவது பற்றி ஆய்வு செய்து நிதியுதவியினை வழங்கலாம் என்று அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியுதவியைப் பெறுவதற்குக் கீழ்க்காணும் தகுதிகள் இருக்க வேண்டும்.

1. ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

2. தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். இதற்கான சான்றிதழ்கள், அந்தந்தப் பகுதியைச் சார்ந்த வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத அதிகாரியிடமிருந்து பெறுதல் வேண்டும்.

3. (1) இருதய அறுவைச் சிகிச்சை கீழ்க்கண்ட மருத்துவமனை களில் நடத்திடல் வேண்டும்.

அ. கிறித்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர்,
ஆ. அப்பல்லோ மருத்துவமனை, சென்னை,
இ. விஜயா மருத்துவமனை, சென்னை.
ஈ. தென்னக இரயில்வே மருத்துவமனை, சென்னை

(2) சிறுநீரக அறுவைச் சிகிச்சை கீழ்க்கண்ட மருத்துவமனை களில் நடத்திடல் வேண்டும்.

அ. கிறித்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர்,
ஆ. கெஸ்ட் மருத்துவமனை, சென்னை,
இ. அப்பல்லோ மருத்துவமனை, சென்னை
ஈ. பண்டாலை கார்டியோ - தோராசிக் ஃபௌண்டேஷன் டிரான்ஸ்பிளாண்டேஷன் சென்டர், சென்னை.

4. அரசு மருத்துவமனைகளில் மேற்கண்ட அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்கள், இந்த நிதியுதவி பெறத் தகுதியுடைய வர்கள் அல்லர்.

5. சென்னையிலுள்ள நோயாளியாயின் மேற்குறிப்பிட்டுள்ள ஏதாவது ஒரு மருத்துவமனையில் செய்து கொள்ளவிருக்கும் அறுவைச் சிகிச்சைக்காகப் பதிவு செய்து நிதி உதவிக்காக, மருத்துவக் கல்வி இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-600 005 என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

சென்னையிலில்லாமல் வெளியூரில் உள்ளவர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

★ **இத்திட்டங்களின்படி 31.10.90 வரை இருதய அறுவைச் சிகிச்சைக்காக 129 பேருக்கும், மாற்றுச் சிறுநீரகச் சிகிச்சைக்காக 27 பேருக்கும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.**

ஏழை எளியவர்களுக்கு இலவசத் தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம்

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள ஏழை, எளிய ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஆதிதிராவிட கிறித்தவர்கள், மிகப்பிற்படுத்தப் பட்டோர், கல் உடைப்போர் ஆகியவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து இலவசமாகத் தொழிற் கருவிகள் வழங்கப்படுகின்றன.

கல் உடைக்கும் கருவிகள், சலவைக் கருவிகள், முடிதிருத்தும் கருவிகள் போன்றவற்றைப் பெறக்கூடியவர்கள் அந்தந்தத் தொழிலை மேற்கொள்ளும் இனத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

அவர்களுடைய ஆண்டு வருமானம் ரூ.5,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

இந்தச் சலுகையைப் பத்தாண்டுகளுக்குள் பெற்றிருக்கக் கூடாது.

இந்தக் கருவிகளை இலவசமாகப் பெற விரும்புவோர், அவர வர்கள் சார்ந்த மாவட்டத்தின் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நல அலுவலர்களுக்கு உரிய படிவத்தில் விண்ணப் பிக்க வேண்டும்.

★ இத்திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டில் பயனடைந்த வர்கள் எண்ணிக்கை 5,000. செலவழிக்கப்பட்ட தொகை ரூ.27.49 இலட்சம். 1990-91-ஆம் ஆண்டில் மேலும் 5,000 பேர்களுக்கு ரூ. 29.35 இலட்சம் செலவில் இலவச தொழிற்கருவிகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



மகளிர்க்குத் தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம்

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மகளிர், விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோருக்கு ஆதரவற்ற மகளிர் மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இலவச தையல் இயந்திரம் இந்த அர சினால் வழங்கப்படுகிறது.

இந்தத் தையல் இயுந்திரம் பெற விண்ணப்பிப்பவருக்கு ஆண்டு வருமானம் ரூ.6,400/-க்குக் குறைவாக இருக்க வேண்டும். வயது 20க்கு மேல் 40 வயதுக்குள் இருக்க வேண்டும்.

உதவி வேண்டி, மாவட்ட சமூகநல அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

★ 1989-90-இல் 1899 தையல் இயந்திரங்கள் ரூ.24 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. 1990-91-இல் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுமார் 900 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளன.

தமிழ்க் 'கா. சு.' நூலகம்,
ஈசுவரவடிவுஅகம் - குழித்தலை,

தமிழரசு அச்சகம்.

ஏழையர்
நலம் பேணும் அரசு

எட்டாவது வரை படித்த
ஏழைவீட்டு இளஞ்சிட்டு
எட்டாப் பழமடியோ
இல்வாழ்க்கை என ஏங்கியதை
- மாற்றிவிட்டு

தட்டாமல் அவள் கழுத்தில்
தாலியேற வைப்பதற்கு
தந்திடும் ஐயாயிரம்
தவமின்றிப் பெற்றவரம்

கருவுற்ற ஏழைப் பெண்கள்
கலப்புமணத் தம்பதியர்
கைம்பெண்ணை மணம் புரிந்தோர்
ஊனமுற்றோர் தொழுநோய் இரவலர்

பொருளற்றுத் திருவற்றுத்
திகைத்திடாமல் - நாம்
புரவலராய் நின்றவரைப்
போற்றுவோம்

குடும்பத் தலைவரை இழந்து
குமுறிக் கதறி
இடும்பைகூர் வறுமையினால்
வாடுவோர்க்கு - அரசு

தரும்தொகைதான் அவர்தம்
கண்ணீர் துடைக்கும்
அரும் தொகையாய்
அமையும்

முதல்வர் கலைஞர்

தொலைக்காட்சி கவியரங்கில் (14.4.90)